# வாய்மை மற்றும் உண்மை பேசுதல்

ஒரு மனிதன் மிகவும் பாவியாக இருந்தான், ஒவ்வொரு தீமையான செயலும் அவனிடத்தில் காணப்பட்டது, அவனிடத்தில் தான் தீயவனாக இருக்கின்ற உணர்வும் இருக்கத்தான் செய்தது, அவனும் பாவமான காரியங்களை விட்டு விலகவேண்டும் என்று முயற்சியும் செய்வான். ஆனால், அதில் வெற்றியடையவில்லை. இந்த உறுத்தல் அவனை ஒரு மார்க்க அறிஞரிடம் கொண்டுசென்றது, அந்த அறிஞர் அவனை வரவேற்று என்ன விஷயம் என்று விசாரித்தார், அவனும் தயக்கமின்றி வெளிப்படையாகத் தன்னுடைய நிலைமையை எடுத்துக்கூறி, தான் திருந்திவிட விரும்புவதாகக் கூறினான். அந்த அறிஞர் அவனைப் பொய்ப்பேசுவதை விட்டுவிடுமாறும் எந்நிலையிலும் உண்மை கூறுமாறும் அறிவுறுத்தினார். அந்த மனிதன் மிகவும் திகைத்துப்போனான். நான் இத்தனை விதமான பாவங்களைச் செய்து கொண்டிருக்கிறேன், ஆனால், இந்த ஆலிம் பொய் சொல்வதை விட்டு விடு என்று ஒரு சாதாரணமான செயலைச் செய்யுமாறு கூறுகிறாரே, இதனால் என்ன பலன்? இருப்பினும் அவன் இனி எப்போது எந்த நிலையிலும் பொய் சொல்லமாட்டேன் என்று உறுதியான முடிவை எடுத்துக் கொண்டான். அவன் திரும்பி விட்டிற்கு வந்தான், பாவமான காரியங்களைச் செய்யும் பழக்கத்திற்கு அடிமையானவன் என்ற வகையில் அவன் மது அருந்தவேண்டும் என்று நினைத்தான், மது கொண்டுவரப்பட்டு பராமாரிக்கப்பட்டது, அவனும் மதுவை அருந்த வாய்வரை கொண்டுசென்ற சமயத்தில் அவனுக்கு ஞாபகம் வந்தது, அவன் நினைத்துப்பார்த்தான், அந்த அறிஞர் ஒருவேளை நீ மது அருந்தினாயா இல்லையா என்று கேட்டு விட்டால் நான் என்ன பதில் சொல்வேன், நான் பொய் பேசக்கூடாது, உண்மை சொன்னால் மிகவும் இழிவுக்கு ஆளாவேன். இந்நிலையில், அவன் இறுதியாக மது அருந்தும் எண்ணத்தை விட்டுவிட்டான். இது போன்றே எந்த ஒரு பாவமான காரியத்தைச்செய்ய எண்ணிய சமயத்திலும் உடனே அந்த ஆலிமுக்கு முன் பதில் கூறவேண்டிய நிலை நினைவுக்கு வரும், உண்மையைக் கூறி இழிவுக்கு ஆளாகிவிடக்கூடாது என்ற அச்சம் அவன் கண்முன் வந்து அச்செயலைவிட்டு விலகிவிடுவான். இவ்வகையில், காலப்போக்கில் ஒவ்வொன்றாக அனைத்துப் பாவச்செயல்களையும்விட்டு விலகியவனாக நல்ல மனிதனாகவும் ஆகிவிட்டான். இது முற்றிலும் உண்மையைப் பேசுவதன் காரணமாக ஏற்பட்ட பாக்கியமாகும்.

இதுபோன்றே மற்றொரு சம்பவமும் கூறப்படுகின்றது. ஒரு சிறுவன் எப்போதும் பொய் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இதற்கும் மேலாக அவன் பொய் சொல்லி மக்களை சிரமத்தில் போடுவதோடு அவர்களைக்கண்டு கேலியும் செய்வதுண்டு. அவன் கடலில் நீராடச்செல்லும்போது கடலில் மூழ்கிக்கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்து காப்

www.tazalfalahi.com

பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கூக்குரலிடுவான், மக்கள் தங்கள் வேலைகளைவிட்டு அவனைக்காப்பாற்ற வரும்போது அவன் திடீரென நீந்திக் கொண்டு அந்த மக்களைக் கேலிசெய்து சிரிப்பான். இது அவனுடைய அன்றாடப் பழக்கமாக ஆகிவிட்டது. ஒரு முறை அவன் உண்மையிலேயே கடலில் மூழ்கிக்கொண்டிருந்தான், அப்போது அவன் அச்சத்தின் காரணமாக உண்மையாகவே கூக்குரலிட்டு என்னைக்காப்பாற்றுங்கள், அல்லாஹ்வுக்காக என்னைக் காப்பாற்றுங்கள், நான் மூழ்கிக்கொண்டிருக்கிறேன், நான் இறந்துவிடுவேன் என்றெல்லாம் கதறிக் கூக்குரலிட்டான். ஆனால், மக்கள் அவனுடைய முந்தைய செயல்களை ஞபாகத்தில் வைத்திருந்தனர், அவன் முன்பு போன்றே பொய்யாகக்கூக்குரலிடுகிறான் என்று நினைத்து யாரும் கவனம் செலுத்தவில்லை. இறுதியாக அவன் மூழ்கி இறந்துவிட்டான். இவ்வகையில், பொய்பேசும் பழக்கம் அவன் உயிரையே வாங்கி விட்டது.

வாய்மை என்பது ஒரு மனிதன் உண்மையானதையே சொல்லலேண்டும் மற்றும் ஒரு சொல் அல்லது சம்பவம் எவ்வாறு நிகழ்ந்ததோ அவ்வாறே அதனை எடுத்துரைக்கவேண்டும், அதில் எதையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது. அல்லாஹ் தஆலா வாய்மை மற்றும் உண்மையே பேசுமாறு கட்டளையிட்டுள்ளான்.

**يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ وَكُونُواْ مَعَ ٱلصَّٰدِقِينَ ﴿١١٩﴾ (التوبة: 119)**

பொருள்: *இறைநம்பிக்கை கொண்டவர்களே, அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், மேலும், வாய்மையாளர்களுக்குத் துணையாக இருங்கள். (தவ்பா 119)*

வாய்மை மற்றும் உண்மையை அல்லாஹ் தஆலா தனக்கே உரியதாகக் கூறியுள்ளான்:

**وَمَنۡ أَصۡدَقُ مِنَ ٱللَّهِ قِيلٗا ﴿١٢٢﴾ (النساء: 122)**

பொருள்: *அல்லாஹ்வைவிட உண்மையானவர்கள் வேறு யார் உள்ளனர் (அந்நிசா 122)*

ஆகவேதான், அவனுடைய வேதமும், அதாவது திருக்ஃகுர்ஆன் முற்றிலும் உண்மையானதாகும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

**هَٰذَا مَا وَعَدَنَا ٱللَّهُ وَرَسُولُهُۥ وَصَدَقَ ٱللَّهُ وَرَسُولُهُۥۚ ﴿٢٢﴾ (الأحزاب: 22)**

பொருள்: *அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நம்மிடம் வாக்களித்தது இதுதான். (அல் அஹ்ஜ்ஸாப் 22)*

வாய்மை மற்றும் உண்மை எவ்விதப் பண்புகள் என்றால் அவை இறைத்தூதர்களின் வாழ்க்கையின் இன்றியமையாத பண்புகளாகக் கருதப்படுகின்



www.uzarfalahi.com

றன. அல்லாஹ் தஆலாவும் தன்னுடைய நபிமார்கள்,இறைத்தூதர்கள் மற்றும் அவர்களுடைய வாய்மையைப்பற்றி சான்று அளித்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

وَاذْكُرْ فِي الْكِتَابِ إِبْرَاهِيمَ ۚ إِنَّهُ كَانَ صِدِّيقًا نَّبِيًّا ﴿٤١﴾ (مريم: 41)

*பொருள்: மேலும், இவ்வேதத்திலுள்ள இப்ராஹீம் (அ) அவர்களுடைய சரிதையை விவரிப்பீராக, அவர் வாய்மையுள்ளவராகவும் நபியாகவும் இருந்தார். (மர்யம் 41)*

ஹஜ்ரத் இஸ்மாயீல் (அ) அவர்களைப்பற்றிக் கூறுகிறான்:

وَاذْكُرْ فِي الْكِتَابِ إِسْمَاعِيلَ ۚ إِنَّهُ كَانَ صَادِقَ الْوَعْدِ وَكَانَ رَسُولًا نَّبِيًّا ﴿٥٤﴾ (مريم: 41)

*பொருள்: நபியே, இஸ்மாயீல் (அ) அவர்களைப்பற்றி இவ்வேதத்தில் உள்ளதைக் குறிப்பிடுவீராக, அவர் வாக்குறுதியை முழுமையாக நிறை வேற்றுபவராகவும் தூதராகவும் நபியாகவும் இருந்தார்.(மர்யம் 54)*

இதுபோன்றே, ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்களைப்பற்றிக் கூறுகிறான்:

يُوسُفُ أَيُّهَا الصِّدِّيقُ ﴿٤٦﴾ (يوسف: 46)

*பொருள்: (அவர் அங்கு சென்று கூறினார்) யூசுஃபே, உண்மையாளரே (யூசுஃப் 46)*

ஹஜ்ரத் இத்ரீஸ் (அ) அவர்களைப்பற்றிக் கூறுகிறான்:

وَاذْكُرْ فِي الْكِتَابِ إِدْرِيسَ ۚ إِنَّهُ كَانَ صِدِّيقًا نَّبِيًّا ﴿٥٦﴾ (مريم: 56)

*பொருள்: நபியே, இத்ரீஸ் (அ) அவர்களைப்பற்றி இவ்வேதத்தில் உள்ள தைக் குறிப்பிடுவீராக, அவர் நேர்மையானவராகவும் நபியாகவும் இருந் தார். (மர்யம் 56)*

இறைத்தூதர் ﷺ அவர்களையும் அவர்களுடைய நபித்துவம் பிரகடனப் படுத்தப்படுவதற்கு முன்பாகவே அவருடைய வம்சத்தினர் அவர்களை அஸ் ஸாதிஃக் மற்றும் அல் அமீன் என்ற பட்டப்பெயர்களைக்கொண்டு அழைத்தும் கண்ணியப்படுத்தியும் வந்தனர். வஹி அருளப்பட்டபின்பு இறைத்தூதர் ﷺ அவர்கள் சற்றே அச்சம் கொண்டபோது அவரை தைரியமூட்டும் வகையில் ஹஜ்ரத் க்ஹதீஜா (அ) அவர்கள் கூறினார்கள், அல்லாஹ் உங்களை வீணாக்கமாட்டான் ஏனெனில், நீங்கள் உண்மை யையே பேசுகிறீர்கள்.

www.uzalfalahi.com

வாய்மை மற்றும் உண்மையின் எண்ணற்ற நிகழ்வுகள் இருக்கின்றன, பல் வேறு வகையில் இது நன்மைகளை ஒன்றிணைக்கும் பண்பாகும். அல்லாஹ் வுடனான வாய்மையான பண்பு இக்ஹ்லாஸ் எனப்படுகின்றது, அதாவது எத்தனை நற்காரியங்கள், அமல்கள் செய்யப்பட்டாலும் அவை அல்லாஹ் வுக்காக மட்டுமே செய்யப்படுவது, வெளிப்படுத்துவதற்காகவோ அல்லது காட்டிக்கொள்வதற்காகவோ இல்லாதிருப்பது. இதுவே, நற்காரியங் களைச் செய்வதில் அல்லாஹ்வுடனான வாய்மை மற்றும் உண்மையின் ஆதாரமாகும். அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முதலாவது நிபந் தனையுமாகும். இதன் பொருள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுப் படுவது மற்றும் அவற்றைப் பேணி நடப்பதின் அடிப்படையே வாய்மை யும் உண்மையும் என்பது தெளிவாகிறது. இதனை மேற்கொள்ளாத நிலை யில் அனைத்துப் பேணுதலான நற்காரியங்களும் வீணாகிவிடும் என்பது உறுதி. இதுபோன்றே, மக்களுடனான வாய்மையான உண்மையான நிலை எப்போதும் உண்மையையே பேசுவதாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

كَبُرَتْ خِيَانَةً تُحَدِّثُ أَخَاكَ حَدِيثًا هُوَ لَكَ مُصَدِّقٌ، وَأَنْتَ بِهِ كَاذِبٌ

*பொருள்: எல்லாவற்றையும்விட மோசமான துரோகம் யாதெனில் ஒரு வன் தன் சகோதரனிடம் ஒரு விஷயத்தைக்கூற, கேட்பவர்கள் அதனை உண்மையென நம்பும் நிலையில் அதனைக் கூறுபவன் பொய்யனாக இருப்பதாகும் (அஹ்மத்).* ஒரு மனிதன் தனக்குத்தானே பொய் சொல்வ தும் உண்டு, அது எவ்வாறெனில், அவன் தன்னைப்பற்றி தெரிந்தும் ஏமாற் றும் முயற்சியில் ஈடுபடுகிறான். தனக்குள் இன்ன இன்ன தீய விஷயங்கள் உள்ளன என்று தெரிந்தும் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பதோடு அவற் றைத் தவிர்க்கவும் முயல்வதில்லை, இவ்வகையில், அவன் தன்னையே ஏமாற்றத்திற்கு அளாக்கிவிடுகிறான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகி றார்கள்:

دَعْ مَا يَرِيبُكَ إِلَى مَا لَا يَرِيبُكَ، فَإِنَّ الصِّدْقَ طُمَأْنِينَةٌ، وَإِنَّ الْكَذِبَ رِيبَةٌ

*பொருள்: எந்த விஷயம் உங்களை சந்தேகத்தில் போட்டுவிடுகின்றனவோ அதனைத் தவிர்த்துவிடுங்கள் மற்றும் எதில் உங்களுக்குச் சந்தேகம் இல் லையோ அதனைக் கடைபிடியுங்கள், ஏனெனில், உண்மை நிம்மதியை அளிக்கக் கூடியதாகும் மற்றும் பொய் சந்தேகம் மற்றும் நிம்மதியைக் குலைக்கக்கூடியதாகும். (திர்மிதி)*

## வாய்மையின் சிறப்புக்கள்

வாய்மையும் உண்மையும் அனைத்து காலங்களிலும் பாராட்டுக்குரிய, விரும்பப்பட்ட பண்புகளாகக் கருதப்பட்டன. அல்லாஹ் தஆலா வாய்மை யான உண்மையாளர்களைப் பாராட்டி அவர்களை இறையச்சமுடையவர்

www.uzairfalahi.com

களாகவும் கூறியுள்ளதோடு அதற்கான கூலி சுவர்க்கம் எனவும் கூறியுள்ளான்.

أُوْلَٰٓئِكَ ٱلَّذِينَ صَدَقُواْۖ وَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡمُتَّقُونَ ﴿١٧٧﴾ (البقرة : 177)

*பொருள்: இவர்களே உண்மையாளர்கள், மேலும், இவர்களே இறையச்சமுடையவர்கள். (அல் பஃகறஹ் 177)*

மற்றொரு இடத்தில் கூறுகிறான்:

قَالَ ٱللَّهُ هَٰذَا يَوۡمُ يَنفَعُ ٱلصَّٰدِقِينَ صِدۡقُهُمۡۚ لَهُمۡ جَنَّٰتٞ تَجۡرِي مِن تَحۡتِهَا ٱلۡأَنۡهَٰرُ خَٰلِدِينَ فِيهَآ أَبَدٗاۖ رَّضِيَ ٱللَّهُ عَنۡهُمۡ وَرَضُواْ عَنۡهُۚ ذَٰلِكَ ٱلۡفَوۡزُ ٱلۡعَظِيمُ ﴿١١٩﴾ (المائدة: 119)

*பொருள்: அப்போது அல்லாஹ் கூறுவான், உண்மையாளர்களுக்கு அவர்களின் உண்மை பயனளிக்கக்கூடிய நாளாகும் இது. இத்தகையோருக்கு கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனங்கள் உண்டு. அங்கு அவர்கள் நிலையாகத் தங்கி வாழ்வார்கள். அல்லாஹ் அவர்களைப்பற்றித் திருப்தி கொண்டான், அவர்களும் அல்லாஹ்வைப்பற்றி திருப்தி கொண்டார்கள், இதுவே மாபெரும் வெற்றியாகும். (அல் மாயிதா 119)*

வாய்மையும் உண்மையும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படைகளாகும், இவ்வுலக மற்றும் மறுமையின் வெற்றிக்கும் அவையே ஆதாரமானவையாகும். மாறாக, பொய்யும் ஏமாற்றுவேலைகளும் குழப்பம் மற்றும் தீமையானவற்றிற்கே வழிவகுக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: வாய்மை மற்றும் உண்மை சொல்வதை அதில் வெளிப்படையாக அழிவு காணப்பட்டாலும் எப்போதும் தவறாது கடைபிடித்து கவனத்துடன் மேற்கொள்ளுங்கள், அதில்தான் வெற்றி இருக்கின்றது. (இப்னு அபித்துன்யா). மற்றொரு நபிமொழியில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ الصِّدْقَ يَهْدِي إِلَى البِرِّ،وَإِنَّ البِرَّ يَهْدِي إِلَى الجَنَّةِ،وَإِنَّ الرَّجُلَ لَيَصْدُقُ حَتَّى يَكُونَ صِدِّيقًا.وَإِنَّ الكَذِبَ يَهْدِي إِلَى الفُجُورِ، وَإِنَّ الفُجُورَ يَهْدِي إِلَى النَّارِ، وَإِنَّ الرَّجُلَ لَيَكْذِبُ حَتَّى يُكْتَبَ عِنْدَ اللَّهِ كَذَّابًا

*பொருள்: வாய்மை நன்மையின் பக்கம் அழைத்துச்செல்கின்றது மற்றும் நன்மைகள் சுவர்க்கத்தின் பக்கம். ஒரு மனிதர் வாய்மை மற்றும் உண்மை பேசும் பண்பினைக் கடைபிடிப்பாரேயானால் அவர் அல்லாஹ்விடத்தில் உண்மையாளராக எழுதப்பட்டுவிடுகிறார். இவ்வாறே, பொய் பாவங்களின் பக்கமாக இழுத்தச்செல்லும் மற்றும் பாவங்கள் நரகத்தின் பக்கம். தொடர்ந்து பொய் பேசுவதை வழக்கமாக ஆக்கிக்கொண்டவன் அல்லாஹ்*

www.uzairfalahi.com

*விடத்தில் பொய்யாளனாக எழுதப்பட்டுவிடுகிறான்.* **(متفق عليه)** சந்தேக மின்றி வாய்மையில் இறைத்தூதர் ﷺ அவர்கள் எல்லாவற்றிற்கும் மேலான ஒரு உதாரணமாகவும் முன்மாதிரியாகவும் இருக்கின்றார்கள். நாம் இவ்விஷயத்திலும் இறைத்தூதர் ﷺ அவர்களையே பின்பற்றி நடக்கவேண்டும். உண்மை பேசுவதை நாம் கடைபிடிப்பது மட்டுமல்லாது அதனை நம்முடைய அடையாளச் சின்னமாக ஆக்கவும் முயற்சிக்கவேண் டும். இது எப்படிப்பட்ட பண்பு என்றால் இதனை நண்பர்கள் விரோதிகள் அனைவருமே அங்கீகரிக்கவும் பாராட்டவும் செய்கின்றனர். ஒரு கவிஞன் *கூறுகிறான்:*

صداقت ہو تو دل سینوں سے کھنچ آتے ہیں اے واعظ     حقیقت خود کو منوا لیتی ہے مانی نہیں جاتی

**பொய்:** வாய்மைக்கு மாற்றமாக பொய் பேசுவது நயவஞ்சகத்தன்மையின் அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இறைத்தூதர் ﷺ அவர் *கள் கூறுகிறார்கள்:*

آيَةُ الْمُنَافِقِ ثَلَاثٌ: إِذَا حَدَّثَ كَذَبَ، وَإِذَا وَعَدَ أَخْلَفَ، وَإِذَا اؤْتُمِنَ خَانَ

*பொருள்: ஒரு நயவஞ்சகனின் மூன்று அடையாளங்கள் உள்ளன: அவன் பேசினால் பொய் பேசுவான், அவன் ஒரு வாக்களித்தால் தன் வாக்கை மீறுவான், அவனிடம் ஒரு அமானிதம் அளிக்கப்பட்டால் அவன் அதில் நம்பிக்கை துரோகம் செய்வான்* **(متفق عليه).** இதன் பொருள் என்ன வெனில் ஒரு உண்மையான முஸ்லிம் பொய் சொல்லமாட்டான். இறைத் தூதர் ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது, ஒரு முஸ்லிம் கோழையாக இருக்க முடியுமா என்று, அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள்: ஆம். மேலும் கேட்கப்பட்டது, ஒரு முஸ்லிம் கஞ்சத்தனமானவான இருக்க முடியுமா என்று, அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள்: ஆம். ஆனால், ஒரு முஸ்லிம் பொய்யனாக இருக்க முடியுமா என்று கேட்கப்பட்டபோது, அதற்கு அவர் கள் (ஸல்) கூறினார்கள், இல்லை, ஒருபோதுமில்லை.(மாலிக்).பொய் சொல்வதன் தன்மை யாதெனில் அது எப்போதும் மறைவதில்லை, எவ்வ கையிலாயினும் வெளியாகியே தீரும். ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் கூறுகிறார் கள், ஒருவர் ஒரு விஷயத்தை எவ்வளவு மறைத்தாலும் வாய் தவறியோ அல்லது முகத்தின் நிறம் மாறுவதன் மூலமோ அது தெரிந்துவிடும், அது எவ்விதமான பொய்யாயினும், சிறிய பொய், மிகப்பெரிய பொய் மற்றும் தேவைப்படும் பொய் என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால், பொய் பொய்யாகத்தான் இருக்கும் அது கருப்புப் பொய்யோ வெள்ளைப் பொய்யோ, சிறியதோ பெரியதோ, தேவையானதோ தேவையற்றதோ, ஒவ்வொரு பொய்யும் பாவம்தான், தண்டிக்கப்படவேண்டிய வெறுக்கப் படவேண்டியதாகும், எல்லாவற்றிற்கும் கேள்வி கணக்கு உண்டு.

www.uzaifalahi.com

ஹஜ்ரத் அஸ்மா பின்த் யஜ்ஸீத் (ர) அவர்கள் ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கேட்டார்கள், இறைத்தூதரே ﷺ எங்களில் ஒரு பெண் ஒரு பொருளை விரும்புவாள், இருப்பினும் அவளிடம் நீ இதனை எடுத்துக்கொள்கிறாயா என்று கேட்கும்போது அவள் இல்லை, இது எனக்குப் பிடிக்கவில்லை என்று கூறிவிடுகிறாள், இதுவும் பொய்யாகுமா? அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள்: நிச்சயமாகப் பொய் பொய்யாகவே எழுதப்படும், அது சிறியதாகவே இருந்தாலும் சரியே (அஹ்மத்). ஹஜ்ரத் அப்துல்லா பின் ஆமிர் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஒரு முறை அவருடைய தாயார் அவரை அழைத்தார்கள், அப்போது இறைத்தூதர் ﷺ அவர்கள் என்னுடைய வீட்டில் இருந்தார்கள். என்னுடைய தாயார் கூறினார், இங்கே வா, இதனை எடுத்துக்கொள். இறைத்தூதர் ﷺ அவர்கள் என்னுடைய தாயாரிடம் கேட்டார்கள் நீங்கள் எதைக்கொடுப்பதற்காக அவரை அழைத்தீர்கள்? அவர்கள் கூறினார்கள் பேரீத்தப்பழம் கொடுப்பதற்காக அழைத்தேன். அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள்: நீங்கள் அவருக்குக் கொடுப்பதாகக் கூறி கொடுக்காவிட்டால் அது பொய்யாக எழுதப்பட்டிருக்கும் (அபூ தாவூத்). எந்த நிலைகளில் பொய் சொல்லப்படலாம்: மூன்று நிலைகள் உள்ளன, அங்கே ஒரு மனிதன் பொய் பேசலாம், அதன் காரணமாக அல்லாஹ் அவனைத் தண்டிக்கமாட்டான், மாறாக, அல்லாஹ் தஆலா அவனுக்கு நன்மையைக் கொடுப்பான். அவற்றுள் இரண்டு கீழ்வருமாறு:

1. **இரண்டு சண்டை சச்சரவிலுள்ளவர்களுக்கிடையே சமரசம் செய்ய முற்படும் நிலையில்:** அதற்கான காரணம் இரண்டு நண்பர்களுக்கிடையே சண்டை ஏற்பட்டுவிட்ட நிலையில் அவர்களுக்கிடையில் சமரசம் உண்டாக்கும் எண்ணத்துடன் ஒருவரிடம் இன்னவர் உங்களை மிகவும் நேசிக்கிறார் உங்களைப்பற்றி மிவும் பாராட்டிப் புகழ்ந்து கூறிக்கொண்டிருந்தார், உங்களுடைய நற்குணங்கள் மற்றும் நற்பண்புகளைப்பற்றிப் பெருமையாகக்கூறிக்கொண்டிருக்கிறார். இதுபோன்றே மற்றவரிடமும்சென்று இவ்விதமாகவே புகழந்துகூறி இதன் பலனாக இவர்களுடைய பகைமை நட்பாக மாறிவிடும் வகையிலும் இருவர்களுடைய மனதிலும் மனக்கசப்பு நீங்கிவிடுமானால் பொய் சொல்லலாம்.

2. **ஒரு முஸ்லிம் விரோதிகளின் பிடியில் சிக்கிவிட்ட நிலையில்** முஸ்லிம்களின் இரகசியங்களைக்கூறுமாறு கட்டாயப்படுத்தும் அவர்களுக்குப் பொய்யான செய்தியைக்கூறி அத்துடன் அவ்விஷயத்தில் தவறான தகவல்களையும் பயன்படுத்தி முஸ்லிம்களுடைய நலனைக் காக்கவேண்டி பொய் சொல்லலாம்.

www.uzairfalahi.com

8. **குடும்ப வாழ்க்கையில் சில சமயங்கள் வரும் அந்நிலையில்** ஒரு மனிதன் கடினமான சொற்களைப்பயன்படுத்தி வீட்டில் நிம்மதியைக் குலைத்து விடுகிறான், உதாரணமாக, அல்லாஹ் எல்லோரையும் ஒரே மாதிரியாக அழகாகப்படைக்கவில்லை, அனைவருடைய நிறமும் வெள்ளையானதாக இருப்பதில்லை, இவ்வகையில் ஒரு கணவன் தன் மனைவியைப் பார்த்து நீ மிகவும் கோரமானவளாக இருக்கிறாய், கருமையான சருமமுடையவளாக இருக்கிறாய், நான் உன்னை விரும்பவில்லை என்றெல்லாம் உண்மையையே எடுத்துச்சொல்வதற்குப் பதிலாக மனைவியைப் புகழ்ந்து பேசி, அழகாக இருக்கின்றாய் என்று கூறி அவளுடைய மற்ற நற்பண்புகளைப்பற்றி எடுத்துக்கூறி நான் உன்னை நேசிக்கிறேன் என்று கூறுவது சிறந்தது. இதுபோன்றே, மனைவியும் தன் கணவனைப்பற்றிக் கூறினால் அதற்காக எந்த தண்டனையும் கிடைக்காது, மாறாக நன்மைதான் கிடைக்கும். சிரித்துக் கேலி செய்யும்போதும் அல்லது ஒருவரைப் புகழும்போதும்கூட பொய் சொல்லக்கூடாது. இதனைப்பற்றி இறைத்தூதர் ﷺ அவர்கள் நயவஞ்சகத்தின் காரணமாக மக்களை அவர்களுக்குமுன் பொய்யாகப் பாராட்டிப் புகழ்ந்துபேசும் இம்மாதிரியானவர்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி கூறியிருக்கிறார்கள். அவர்கள் ﷺ கூறுகிறார்கள்:

إِذَا رَأَيْتُمُ الْمَدَّاحِينَ، فَاحْثُوا فِي وُجُوهِهِمِ التُّرَابَ

பொருள்: *ஒருவர் உங்கள் முகத்திலேயே உங்களைப்புகழ்ந்து பாராட்டினால் அவர் முகத்தின்மீது மண்ணை வாரி வீசுங்கள்* (முஸ்லிம்). இதுபோன்றே, சிலர் மற்றவர்களைப் பார்த்து சிரித்துக் கேலி செய்வதற்காக பொய்யான விஷயங்களைப் பயன்படுத்துகின்றனர், இப்படிப்பட்டவர்களை இறைத்தூதர் ﷺ அவர்கள் கண்டனம் செய்துள்ளார்கள் மற்றும் அவர்களுக்கான தண்டனையைப்பற்றி எச்சரித்தும் உள்ளார்கள். அவர்கள் ﷺ கூறுகிறார்கள்: பொய்யானவற்றைக்கூறி மக்களை சிரிக்கவைக்கும் ஒருவனுக்கு அழிவுதான் உண்டு, அவனுக்கு அழிவுதான், அவனுக்கு அழிவுதான் (திர்மிதி).

மற்றொரு அறிவிப்பில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

أَنَا زَعِيمٌ بِبَيْتٍ فِي رَبَضِ الْجَنَّةِ لِمَنْ تَرَكَ الْمِرَاءَ وَإِنْ كَانَ مُحِقًّا، وَبِبَيْتٍ فِي وَسَطِ الْجَنَّةِ لِمَنْ تَرَكَ الْكَذِبَ وَإِنْ كَانَ مَازِحًا وَبِبَيْتٍ فِي أَعْلَى الْجَنَّةِ لِمَنْ حَسَّنَ خُلُقَهُ

பொருள்: *தான் ஒன்றில் உரிமையுடையவராக இருந்தும் அதற்காக சண்டைசச்சரவினைத் தவிர்க்கும் ஒரு மனிதருக்காக நான் சுவர்க்கத்தின் ஓரத்தில் ஒரு வீட்டிற்கான உத்திரவாதமளிக்கிறேன். மேலும் கேலிக்காகவும் பொய் சொல்லாத ஒருவருக்கு சுவர்க்கத்தின் மத்தியில் ஒரு வீட்டிற்கான உத்திரவாதமளிக்கிறேன். மேலும், யார் தன்னுடைய நற்குணங்களைப் பேணிப்*

*பாதுகாப்பார்களோ அவர்களுக்கு நான் சுவர்க்கத்தின் மிகவும் உயர்வான இடத்தில் ஒரு வீட்டிற்கான உத்திரவாதமளிக்கிறேன் (அபூதாவூத்).* ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீஃக் (ர) அவர்கள் எவரும் அவர்களைப் பற்றிப்புகழந்து பேசுவதைக் கேட்டால் கூறுவார்கள், இறைவா, என்னைப் பற்றி நீ என்னைவிட அதிகமாகவே அறிகிறாய், மேலும் என்னைப்பற்றி நான் என்னைப் புகழ்ந்து பேசுபவர்களைவிட அதிகமாக அறிவேன். இறைவா, அவர்களுடைய நல்லெண்ணங்களை எனக்கு நன்மை பயக்கக் கூடியவைகளாக ஆக்கிவை மேலும், இவர்களுக்குத் தெரியாமலிருக்கும் எனக்குள் காணப்படும் குறைகள் மற்றும் குறைபாடுகளை மன்னித்துவிடு. மேலும், அவர்கள் என்னைப்பற்றிக் கூறுபவற்றிற்கெல்லாம் என்னை கேள்வி கணக்கிற்கு ஆளாக்கிவிடாதே.

* * *

www.uzairfalahi.com